**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.110/2023**

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 21 ஆம் நாள் திங்கள் கிழமை

அ.சா.8 (பட்டியல் சாட்சி–6) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | புனிதா | க/பெ.: | தில்லையரசன் |
| கிராமம்: | புதுப்பள்ளி, வேட்டைக்காரன் இருப்பு | தாலுக்கா: | கீவளூர் |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 45 | முகவரி: | புதுப்பள்ளி, வேட்டைக்காரன் இருப்பு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 21.07.2025

**முதல் விசாரணை :–**

நான் தற்போது மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, 2, 3 மற்றும் இதர சாட்சிகளை எனக்கு தெரியும். கடந்த 27.10.2022–ம் தேதி மாலை 06.00 மணியளவில் வேணுகோபால் வீட்டின் அருகே கொற்கையில் நான் வயலுக்கு வேலைக்கு சென்றுவிட்டு வந்து கொண்டிருந்தேன். அப்போது அ.சா.1–ஐ அடித்து ரமேஷ், வேணுகோபால், ஜனார்த்தன், தமிழ் மைந்தன் ஆகியோர்கள் கம்பியால் அடித்தும், பைக்கை உடைத்தும், அவரது செல்போனை உடைத்தும், கம்பியால் காலில் குத்தி பரபரவென சாலையில் இழுத்து சென்று வேணுகோபால் வீட்டிற்கு எதிரே அண்ணாதுரையில் வீட்டு கொல்லையில் போட்டுவிட்டு சென்றுவிட்டனர். அதன் பிறகு ஆம்புலன்ஸீக்கு போன் செய்து அ.சா.1–ன் மனைவி அங்கு வந்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். மேற்படி சம்பவம் குறித்து காவல் துறையினர் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்துள்ளார்.

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.